# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை 18.10.2024 கதிர் 391



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# அரசியல் தலைவரின் மகன் டுபாயில் பதுக்கிய பணத்தை ஏன் மீடகவில்லை?

## ஒரே மேடையில் ரணில், சந்திரிகா வாக்குவாதம்

அரசியல் தலைவரின் இளைய மகன் ஒருவர் டுபாய் வங்கி ஒன்றில் 1000 மில்லியன் அமெரிக்க டொலர்களை மறைத்து வைத்திருப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகள் ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகா குமாரதுங்கவும் கடும் ஒரே மேடையில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை பட்டயக்கணக்காளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்விலேயே இந்த வாக்குவாதம் இடம்பெற்றது. அரசியல் தலைவர் ஒருவரின் இளைய மகன்துபாயில்1000 மில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு மேல் மறைத்து வைத்திருப்பது 2015 இல் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தினால் அதனை மீட்டு நாட்டிற்கு கொண்டுவர முடியவில்லை என சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

2➤





# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30 பேரிடம் விசாரணை

## கிளிநொச்சியில் இன்று முன்னெடுக்கப்பட்டது

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30 பேரிடம் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தில் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் தியாகராஜா யோகராஜா மற்றும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சிரேஸ்ட சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆகியோரின் தலைமையில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் போனோர் தொடர்பில் 21,630 க்கு மேற்பட்ட விண்ணப்ப படிவங்கள் இதுவரையில்

2➤

# வன்னி மாவட்டத்தில் வாக்களிப்புக்கு இடைக்கால தடை விக்கக்கோரி மனு

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தின் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்கு இடைக்கால தடை உத்தரவு ஒன்றை வழங்குமாறு சிறி ரெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா தலைமையில் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தேசிய கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரியே உயர் நீதிமன்றத்தல் இம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2➤

# ஈஸ்டர் தாக்குதல் பேரழிவுடன் அரசியல் செய்ய வேண்டாம்

## கத்தோலிக்க திருச்சபை எச்சரிக்கை



உதய கம்மன்பில உயிர்த்த ஞாயிறுதாக்குதல் பேரழிவுடன் அரசியல் செய்யக்கூடாது என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழுக்களை அமைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில்

2➤

# சங்குப்பிட்டி பாலத்தில் பயணிக்க பார ஊர்திகளுக்கு 3 நாள் தடை



யாழில் இருந்து பூநகரி செல்லும் கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு ஃ சேதம் காரணமாக உடனடியாக அவசர திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் இன்று நண்பகல் 12.00 மணியிலிருந்து மூன்றுநாட்களுக்கு இப்பாலத்தினூடாக கனரக வாகனங்களின் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளார்கள்.

இதேவேளை இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் சிற்றூர்தி சேவையில் பயணிக்கும் பயணிகள் மாத்திரம் பயணித்து சில இடங்களில் இறங்கி நடந்து செல்ல வேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும், மேலும் வைத்தியசாலைக்கு

2➤

## சங்குப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செல்ல வேண்டி நோயாளர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க

## காணாமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைக்கப்பட்டுள்ளதாகவும், விண்ணப்ப படிவங்களில் பொலிசார் மற்றும் இராணுவத்தினர் முப்படையினரும் அடங்களாக உள்ளதாகவும் இதில் விசாரணைக்காக 14 ஆயிரத்து 988 விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

6,688 விண்ணப்ப படிவங்கள் குறித்து பூர்வாங்க விசாரணைகள்நடைபெற்று முடிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 3800க்கும் மேற்பட்ட விண்ணப்ப படிவதாரிகளுக்கு ஷரூபா இரண்டு லட்சம் ஷரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கொடுப்பனவு அவர்களுக்கான இழப்பீட்டுக் காண கொடுப்பளவு அல்ல அவர்களின் வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காகவே வழங்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. 113

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நான் எனது கண்ணால் அந்த வங்கிக் கூற்றை பார்த்தேன், ஆனால் அந்த ஆவணங்களின் மூலப்பிரதிகள் இல்லாததாதல் எங்களால் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியவில்லை என்றும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க தனது அரசாங்கம் அப்போது அதற்காக ஆட்களை டுபாய்க்கு அனுப்பியது. ஆனால் எந்த பணத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறவினர்கள் வெளிநாட்டில் பணத்தை மறைத்து வைத்திருக்கின்றனர் என்று எனக்கு தெரிவித்தனர். டுபாய் நஷனல் வங்கியிலேயே அந்த பணம் மறைத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். பொலிஸ் - சட்டமா அதிபர் திணைக்களம் இலஞ்ச ஊழல் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை நாங்கள் துபாய்க்கு அனுப்பிவைத்தோம் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்துள்ளார்.

எங்களால் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை வெளிவிவகார அமைச்சர் திலக்மாரப்பன டுபாயின் வெளிவிவகார அமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொண்டார். ஆனால் பணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. நீதிமன்ற உத்தரவின்றி விபரங்களை வழங்க முடியாது என்று அந்த வங்கி தெரிவித்துவிட்டது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாங்கள் சிங்கப்பூர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிற்கும் குழுக்களைஅனுப்பினோம் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் அறியத்தந்துள்ளார்.

மேலும், கனகர வாகனங்கள் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதால் மாற்றுப் பாதையினை பயன்படுத்துமாறும், பாதைக்கான திருத்த வேலைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் குறித்த தினத்திற்கு முன்னர் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனநாயக தேசிய கூட்டணி கட்சியினை சேர்ந்த வன்னி மாவட்ட வேட்பாளர் ப.உதயராசா மற்றும் மூவரால் சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஊடாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்ட சிலர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

தாம் வன்னி மாவட்டத்திற்காக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் வேட்புமனுவை கையளித்ததாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்த சந்தர்ப்பத்தில் குறித்த வேட்புமனு முறையாக முன்வைக்கப்படவில்லை என குறிப்பிட்டு அதனை ஏற்றுக்கொள்வதை அவர் நிராகரித்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து ஆவணங்களும் முறையாக முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானது என்பதால் அந்த தீர்மானத்தை வலுவற்றதாக்கும் ரிட் எழுத்தாணையை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், மனு மீதான விசார ணைகள் நிறைவடையும் வரை வன்னி மாவட்டத்திற்காக நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பை இடைநிறுத்தும் இடைக்கால தடையுத்தரவையும் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர்.

## ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசிங்கவை நாங்கள் கேட்டுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக உதயகம்மன்பில வேண்டுகோள் விடுத்துள்ள அறிக்கைகள் குறித்து நாங்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிவித்துரு ஹெல உறுமய தலைவர் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம். சிஐடியினர் விசாரணைகளை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவிசெனிவரட்ண நியமிக்கப்பட்டுள்ளது குறித்தும் ஷானி அபயசேகர மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறித்தும் எங்களிற்கு எந்த பிரச்சினையுமில்லை என அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் பேரழிவு குறித்து பெருமளவு அறிக்கைகள் வெளியாகியுள்ளன, சிஐடியினர் இது குறித்து பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்கட்டும், அவர்கள் உண்மையை கண்டுபிடிப்பார்கள் என நம்பிக்கை கொண்டுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அநுர அரசை ஆதரிக்கத் தயாராக இருக்கும் தமிழ்த் தரப்புக்கள் யார்?

## விளக்கம் தருகின்றார் கஜேந்திரகுமார்பொன்னம்பலம்



"தமிழ் தரப்புக்கள் தேர்தலின் பின்னர் தன்னை ஆதரிக்க இருப்பதாக ஜனாதிபதி அநுர கூறியுள்ளார். நிபந்தனை இல்லாத ஆதரவினை கொடுக்கக்கூடிய ஒரே ஒரு தரப்பு இந்த தமிழ் தரப்பு ஊழல் வாதிகள்தான்" என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "தங்களின் ஊழல் பிடிபடக்கூடாது என்பதற்காக இவர்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்க தயாராக இருக்கின்றார்கள்" என்றும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்

"தேசிய மக்கள் சக்தியின் அங்கம் வகிக்கக்கூடிய ரில்வின் சில்வா ஒரு கூட்டத்தில் வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய தமிழர்களுக்கு அதிகார பகிர்வு எதுவும் அவசியம் இல்லை. அது தமிழ் மக்களின் கோரிக்கை

யாகவும் இல்லை என்றும் சொல்லியுள்ளார்" என்று சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "கடந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு புதிய அரசியல் அமைப்பு ஊடாக இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்ற கருத்தினை வெளிப்படுத்தி இருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்

"இன்று அநுரகுமார திசநாயக்காவின் செயற்பாட்டினை எடுத்து பார்த்தால் தென்னிலங்கையில் ஊழலினை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும் வடக்கு, கிழக்கில் ஊழல்வாதிகளை அழிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை" என்று தெரிவித்த கஜேந்திரகுமார், "ஊழல் வாதிகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினை தவிர்ந்து மற்றைய முழுப்பேரும் உள்ளே போவார்கள்" என்றும் குறிப்பிட்டார்.

"தேர்தலின் பின்னர் அநுரவுக்கு அறுதி பெரும்பான்மை கிடைக்குமா என்பது கேள்விக்குறி. அந்த பெரும்பான்மையினை எடுப்பதற்கு வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் தரப்புக்களைத்தான் தேடவேண்டும்" என்று குறிப்பிட்ட கஜேந்திரகுமார், "அதில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியுடன் பேரம்பேசுவது கடினமான விடயம்" என்றும், "அவ்வாறு இருந்தால் தமிழர்களின் உரிமைசார்ந்த விடயங்களில் விட்டுக்கொடுப்புக்களை அவர்கள் செய்யவேண்டி வரும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வீட்டுக்கு வீடு தேர்தல் பிரசாரங்களுக்கு 5க்கு உட்பட்டவர்களே செல்ல முடியும்

## தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் சிந்தக விளக்கம்





(வி.ரி. சகாதேவராஜா)

அண்மையில் ஜனாதிபதி தேர்தலில் பூசிய மை சிலவேளை அழியாமலிருக்கலாம். அதற்காக எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வேறொரு கைவிரலில் மை பூசப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக உடகம தெரிவித்தார் .

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவும் தகவல் தொடர்பாடல் அமைச்சும் சேர்ந்து அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கை இன்று வெள்ளிக்கிழமை அம்பாறையில் நடத்தியது.

அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்ற இந்த அமர்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தலைமை வகித்தார். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் உதவி தேர்தல் ஆணையாளர் கசுன் அத்தநாயக்க மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சின் உதவி பணிப்பாளர் திலகரத்ன நீதிக்கும் புலனாய்வுக்குமான மேலதிக ஆணையாளர் குலரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள் .

அங்கே எதிர்வரும் தேர்தல் தொடர்பாக பல சட்ட திட்டங்கள் ஊடகவியலாளர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள் வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை விலாவாரியாக கூறப்பட்டது.

தேர்தலும் ஊடகமும் ஒன்றுதான் ஒரு காலத்தில் ஊடக பொறுப்பு என்பது குறைவாக இருந்தது. இன்று சமூக ஊடகங்கள் அனைத்தும் சேர்ந்து மிகவும் உன்னிப்பாக அவதானித்து உள்ளது.

இன்று பத்திரிகை வாசிப்பு குறைந்து வருகின்றது. நாங்கள் அன்றும் இன்றும் பத்திரிகை ஊடாகத்தான் மொழி அறிவு விமர்சன அறிவு போன்றவற்றை அறிந்தோம். அது ஒரு கலை. ஆனால் இன்று பல ஊடகங்கள் பொய்யை தொடர்ந்து சொல்லுகின்றதால் மக்கள் அதனை புறந்தள்ளி வருகிறார்கள். அதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் உதாரணமாகும்.

எனவே ஊடக தர்மத்துடன் தேர்தலை அணுக வேண்டும். வாக்குச்சாவடிக்குள் எந்த காரணம் கொண்டும் புகைப்படமோ வீடியே

ா எடுக்க முடியாது. வெளியில் அதனை செய்யலாம். ஐந்து பேருக்கு உட்பட்டவர்கள் வேட்பாளர் இல்லாமல் பிரசார நடவடிக்கையில் வீடுவீடாக செல்லலாம். வேட்பாளர்கள் புகைப்படம் தரித்த வாகனத்தில் கட்டாயம் வேட்பாளர் இருக்க வேண்டும் . வேட்பாளர்கள் அலுவலகம் அதற்கான சட்டதிட்டங்கள் இப்படி பல விடயங்கள் அங்கு கூறப்பட்டது.

# புதிய யாப்பு வரும்வரையில் மாகாண சபைகள் தொடரும்

## தேசிய மக்கள் சக்தி பிரமுகர் வவுனியாவில் தெரிவிப்பு

“நாங்கள் புதிய ஒரு அரசியல் யாப்பை விரைவாக கொண்டு வருவோம். அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரை மாகாணசபை முறைமையை பாதுகாப்போம். அந்த தேர்தலும் நடத்தப்படும்” என்று தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின்



முக்கியஸ்தருமான பிமல் ரட்நாயக்க.

“அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்” என்றும் பிமல் ரட்நாயக்க குறிப்பிட்டார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பிமல் ரட்நாயக்க இவ்வாறு கூறினார்.

“தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பாக ரில்வின் சில்வா கருத்து தெரிவித்தமை தொடர்பாக நான் கேள்விப்படவில்லை. அவ்வாறான ஒரு கருத்தை ரில்வின் சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை” என்றும் தெரிவித்த பிமல் ரட்நாயக்க, “உண்மையில் நாம் ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் வடக்கு - கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களுக்கு அரசியல், கலாசார அசாதாரணங்கள் இந்த நாட்டில் ஏற்பட்டதென்று ஏற்றுக்கொள்கின்றோம்” என்றும் தெரிவித்தார்.

“இலங்கையில் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அது எமது கொள்கைகளிலும் ஒன்று” என்றும் குறிப்பிட்ட பிமல் ரட்நாயக்க, “அடுத்து அனைவருக்குமான நீதி சமமானதாக இருக்கவேண்டும்” என்றும், “புத்தகத்தில் மாத்திரம் அல்ல செயற்பாட்டிலும் அது இருக்கவேண்டும்” என்றும் வலியுறுத்தினார்.

“தமிழ் முஸ்லிம் மக்களின் கலாசார உரிமைகள் ஒழுங்காக பாதுகாக்கப்படவில்லை. அதை ஏற்றுக்கொள்கின்றோம். அதனைப் பாதுகாப்பதற்காகவே 13 ஆவது திருத்தம் இந்தியாவால் கொண்டு

வரப்பட்டிருந்தாலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை” என்றும் குறிப்பிட்ட பிமல் ரட்நாயக்க, “ஆனால் தமிழ், முஸ்லிம் மக்கள் நினைக்கின்றார்கள் அந்த சீர்திருத்தம் மாத்திரம் இருந்தால் போதும் என்று. ஆனால் நாங்கள் புதிய ஒரு அரசியல் யாப்பினை கொண்டு வருவோம்” என்றும் அவர் தெரிவித்தார்.

“அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரை மாகாணசபை முறைமையை பாதுகாப்போம். அந்த தேர்தலும் நடத்தப்படும்” என்றும் பிமல் ரட்நாயக்க மேலும் தெரிவித்தார்.




# யாஹ்யா சின்வார் படுகொலை! ஹமாஸிற்கு பாரிய பின்னடைவு

## போர்க்களத்தில் புதிய திருப்பம் ஏற்படுமா?

ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வார் காஸாவில் நேற்று கொல்லப்பட்டதாக இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார். ஹமாஸ் தலைவர் இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்டதாக அவர் கூறியிருக்கிறார்.

சின்வாரை அவர் 'படுகொலை மற்றும் அட்டூழியங்களுக்குப் பின்னால் இருந்த மூளை' என்று வர்ணித்தார். மேலும் "இது இஸ்ரேலுக்கு ஒரு குறிப்பிடத்தக்க ராணுவ மற்றும் தார்மீக சாதனை. ஈரான் தலைமையிலான தீவிர இஸ்லாத்தின் தீய அச்சுக்கு எதிராக முழு சுதந்திர உலகிற்கும் கிடைத்த வெற்றி," என்றார் காட்ஸ்.

"சின்வாரைக் கொன்றது பணயக்கைதிகளை உடனடியாக விடுவிக்கும் வாய்ப்பைத் திறக்கிறது. இது காஸாவில் ஹமாஸ், மற்றும் இரானின் கட்டுப்பாடு இல்லாத ஒரு புதிய மாற்று யதார்த்தத்திற்கு வழி வகுக்கும்" என்றார்.



முன்னதாக, ஹமாஸ் ஆயுதக்குழுவின் தலைவர் யாஹ்யா சின்வார் காஸாவில் கொல்லப்பட்டாரா என்பதற்கான 'சாத்தியக்கூறுகளைச் சரிபார்த்து வருவதாக' இஸ்ரேல் ராணுவம் தெரிவித்திருந்தது.

இது ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு மிகப்பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்ட அறிக்கையில், 'ஒரு வருடகால தேடுதலுக்குப்' பிறகு நேற்று காஸாவின் தெற்குப் பகுதியில் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் சின்வார் கொல்லப்பட்டார்', என்று கூறப்பட்டுள்ளது.

சின்வார் நேற்று கொல்லப்பட்டதாக இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் கூறியதை அடுத்து இது வந்துள்ளது. இந்த முரண்பாட்டிற்கான காரணம் தெளிவாக இல்லை.

இஸ்ரேல் பாதுகாப்புப் படை, தனது அறிக்கையில், சின்வார் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி நடந்த தாக்குதலைத் திட்டமிட்டு செயல்படுத்தியதாகவும், 'பல இஸ்ரேலியர்களின் கொலை மற்றும் கடத்தலுக்குப் பொறுப்பானவர்' என்றும் கூறுயிருக்கிறது.

"காஸா பகுதியில் உள்ள ஹமாஸ் சுரங்கப்பாதைகளில், தரைக்கு மேலேயும் கீழேயும் காஸாவின் பொதுமக்களுக குப் பின்னால் மறைந்திருந்த யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டார்," என்று அது கூறுகிறது.

ஹமாஸின் மூத்த உறுப்பினர்களது சந்தேகத்திற்கிடமான இடங்களைச் சுட்டிக் காட்டிய உளவுத் தகவலைத் தொடர்ந்து தெற்கு காஸாவில் தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேலிய ராணுவம் கூறுகிறது.

அப்பகுதியில் இயங்கி வரும் 828-வது படைப்பிரிவைச் சேர்ந்த இஸ்ரேலிய வீரர்கள் 'மூன்று பயங்கரவாதிகளை அடையாளம் கண்டு கொன்றனர்' என்று இஸ்ரேலிய ராணுவம் கூறுகிறது. கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சின்வார் என்பதை உறுதிப்படுத்தியது.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி இஸ்ரேலில் ஹமாஸ் ஆயுதக்குழு நடத்திய தாக்குதலில், 1,200 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 200-க்கும் மேற்பட்டோர் பணயக்கைதிகளாக கொண்டு செல்லப்பட்டனர். இதற்கு காரணமானவர்களில்ஒருவராக யாஹ்யா சின்வாரை இஸ்ரேல் குற்றம்சாட்டி வந்தது.

இவர் காஸா பகுதியின் தெற்கு முனையில்உள்ள கான்யூனிஸ்அகதிகள் முகாமில் பிறந்தார். 62 வயதாகும் யாஹ்யா சின்வார், அபு இப்ராஹிம் என்று பரவலாக அறியப்படுகிறார். பாலத்தீனர்கள் 'அல்-நக்பா' (பேரழிவு) என்று அழைக்கும் சம்பவத்திற்குப் பிறகு அவரது குடும்பம் அகதிகளானார்கள்.

1948 ஆம் ஆண்டு நடந்த இந்தச் சம்பவத்திற்கு பிறகு இஸ்ரேல் என்ற நாடு உருவானது. அதைத் தொடர்ந்து நடந்த போரில் பாலத்தீனர்கள் அவர்களின் மூதாதையர் வீடுகளில் இருந்து பெருமளவில் இடம்பெயர்ந்தனர்.

சின்வார் முதன்முதலாக 1982 ஆம் ஆண்டு, அவரது 19-வது வயதில் இஸ்ரேலால் கைது செய்யப்பட்டார். பின்னர் மீண்டும் 1985 ஆம் ஆண்டு கைதான போது ஹமாஸின் நிறுவனர் ஷேக் அகமது யாசினின் நம்பிக்கையைப் பெற்றார்.

இருவரும் 'மிகமிக நெருக்கமானார்கள்' என்று டெல் அவிவில் உள்ள தேசியப் பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் கோபி மைக்கேல் கூறுகிறார். அமைப்பின் ஆன்மீகத் தலைவருடனான இந்த உறவு பின்னர் சின்வாருக்கு இயக்கத்திற்குள் ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்தது, என்கிறார் அவர்.

ஹமாஸ் 1987ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, சின்வார் அக்குழுவின் பயங்கரமான உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பான அல்-மஜ்தை நிறுவினார்.

1988 ஆம் ஆண்டு சின்வார் இரண்டு இஸ்ரேலிய வீரர்களைக் கடத்திச் சென்று கொல்ல திட்டமிட்டதாகக் கூறப்படுகிறது. அதே ஆண்டு அவர் கைது செய்யப்பட்டார். 12 பாலத்தீனர்களைக் கொன்றதற்காக இஸ்ரேலால் தண்டிக்கப்பட்டார். அவருக்கு நான்கு ஆயுள்தண்டனைகள் விதிக்கப்பட்டன.

சின்வார் தனது வாழ்வில் 22 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேலிய சிறைகளில் கழித்துள்ளார்.

அவர் 2011-ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக விடுவிக்கப்பட்டார். அதில் 1,027 பாலத்தீன மற்றும் இஸ்ரேலிய அரேபிய கைதிகள், ஒரே ஒரு இஸ்ரேலிய பணயக்கைதியான இஸ்ரேல் ராணுவ வீரர் கிலாட் ஷாலிட்டிற்கு ஈடாக சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

ஹமாஸின் மூத்த இராணுவத்தளபதியான சின்வாரின் சகோதரரால் கடத்தப்பட்டு ஐந்து வருடங்களாக ஷாலித் சிறைபிடிக்கப்பட்டிருந்தார்.

இதன் பிறகு அவர் காஸாவிற்கு திரும்பியதும், உடனடியாக ஒரு தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார், என்று கோபி மைக்கேல் கூறுகிறார். ஆனால், "மக்கள் அவரைப் பார்த்து பயந்தார்கள். அவர் மிகவும் கொடூரமானவர்," என்றும் கோபி மைக்கேல் கூறுகிறார்.

சிறையை விட்டு வெளியேறிய உடனேயே, சின்வார் இஸ்ஸெடின் அல்-கஸ்ஸாம் படை மற்றும் அதன் தலைமைப் பணியாளர் மர்வான் இசாவுடன் ஒரு கூட்டணியை உருவாக்கினார் என்று வாஷிங்டன் மையத்தின் ஆராய்ச்சியாளர் எஹூட் யாரி கூறுகிறார்.

2013-ஆம் ஆண்டு, அவர் காஸா பகுதியில் உள்ள ஹமாஸின் அரசியல் பணியகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், 2017-ஆம் ஆண்டு அவர் அதன் தலைவராக ஆனார்.

சின்வாரின் இரக்கமற்ற தன்மை மற்றும் வன்முறைப் போக்கு 'கான் யூனிஸின் கசாப்புக்காரன்' என்ற புனைப்பெயரை அவருக்குப் பெற்றுத் தந்தது.

இஸ்ரேலின் பாதுகாப்பு மற்றும் காவல் அமைப்பில் உள்ள பலர், கைதிகள் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக சின்வாரை சிறையில் (6ஆம் பக்கம் பார்க்க...)



# இந்தியாவுடனான ஒப்பந்தங்களை மீள்பரிசீலிப்பது என்பது கைகளைச் சுட்டுக்கொள்வதை போன்றது

## அரசாங்கத்தை எச்சரிக்கிறார் நிமல் லான்சா



"இந்தியாவுடனானஒப்பந்தங்களை மீண்டும் பரிசீலிப்பது என்பது கைகளை சுட்டுக்கொள்வது போன்றது.

இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்எமக்கு சாதகமானவை . இது தொடர்பாக மீள் பரிசீலனை செய்வதென்பது காலம் கடத்துவதாகும்" என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கம்பஹா மாவட்டத்தில் புதிய ஜனநாயக கூட்டணியில் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமான நிமல் லான்சா வலியுறுத்தினார்.

நீர்கொழும்பு கடற்கரை தெருவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கும்போதே நிமல் லான்சா இவ்வாறு தெரிவித்தார்.

நிமல் லான்சா மேலும் கூறுகையில், "ஜனாதிபதி அநுர அரசுக்கு சர்வதேச தொடர்புகளை பேணும் அறிவில்லை. இந்தியாவுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது கவனமாக இருக்க வேண்டும்" என்றும், "இந்தியா இன்று உலகின் மூன்றாவது வல்லரசு. இலங்கைக்கு மிக முக்கியமான நாடு. இந்தியாவுடனான ஒப்பந்தங்களை மீண்டும் பரிசீலிப்பது என்பது கைகளை சுட்டுக்கொள்வது போன்றது" என்றும் அவர் எச்சரித்தார். "சகல காரணங்களையும்நன்றாக பரிசீலித்தே எமது அரசு இந்தியாவுடன் ஒப்பந்தங்களை செய்துகொண்டது" என்றும் தெரிவித்த நிமல் லான்சா, "இந்தியாவுகூடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் எமக்கு சாதகமானது. இதுதொடர்பாகமீள்பரிசீலனை செய்வதென்பது காலம் கடத்துவதாகும்" என்றும், "சர்வதேசத்திடமிருந்து கிடைக்கும் உதவிகள், செயற்திட்டங்கள், முதலீடுகள் என்பவற்றை ஒத்திவைப்பது என்பது நாட்டை பின்னோக்கி கொண்டுசெல்வதைக்குறிக்கும்" என்றும் சுட்டிக்காட்டினார்.

"யார் வந்தாலும் தேசங்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களை அமுல்படுத்தி நாட்டுக்கு சிறந்த முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் வலியுறுத்திய நிமல் லான்சா, "டொலரின் மதிப்பு குறையும் போதும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. முட்டை, தேங்காய், வெங்காயம், கிழங்கு போன்றவற்றின் விலைகள் இந்த அரசு பொறுப்பேற்கும் போது இருந்த விலையை விட அதிகரித்துள்ளன" என்றும் சுட்டிக்காட்டினார்.

"ரூபாவின் பெறுமதி பலமடையும் போது இறக்குமதி பொருட்களின் விலைகள் குறைய வேண்டும்" என்று தெரிவித்த நிமல் லான்சா, "ஆனால் அப்படி இல்லை. இவர்களுக்கு நாட்டை ஆட்சி செய்த அனுபவம் இல்லை. புதியவர்கள் வந்தாலும் இதே நிலைமை தான்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் இந்தியாவில் அமைக்கப்படவிருந்தகால்லாலைமின்உற்பத்தி நிலையம் உட்பட சில உடன்படிக்கைகள் மீள்பரிசீலனை செய்யப்படும் என்று அநுர அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது. இது தொடர்பாகவே நிமல் லான்சா இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# சட்டவிரோதமாக மணல் அகழ்வு கிளாலியில் 14 டிப்பர் மணல் மீட்பு

கிளாலி பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து கொண்டு செல்வதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 14 டிப்பர் மணல் பொலிசாரால் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரட்ணவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கிளிநொச்சி கிளாலி பகுதியில் பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜீ.குலரட்ண தலைமையில் பளை பொலிஸ் பிரிவுக்குற்பட்ட கிளாலி பகுதியில் குறித்த 14 டிப்பர் மணலையும் பொலிசார் மீட்டனர்.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நாளைய தினம் நீதி மன்றுக்கு அறிக்கையிடவுள்ளனர். 113





## கழிவகற்றல் வாகனங்களை துரிதமாக திருத்த நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் பழுதடைந்துள்ள திண்மக் கழிவகற்றல் சேவை வாகனங்களை துரிதமாக திருத்தி முடிக்குமாறு மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் சேவைக்குரிய வாகனங்களில் ஒரு கொம்பெக்டர் மற்றும் 04 உழவு இயந்திரங்கள் உட்பட 06 வாகனங்கள் பழுதடைந்திருக்கின்ற நிலையில் அவை திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

எனினும் குறித்த வாகனங்களின் திருத்த வேலைகள் தாமதமடைவதால் திண்மக் கழிவகற்றல் சேவையை முன்னெடுப்பதில் பாரிய அசௌகரியங்கள் ஏற்படுவதாக மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் மாநகர ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதையடுத்து வாகன திருத்தும் தளத்திற்கு இன்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இயந்திர திருத்துனர்களுக்கு ஆணையாளர் இந்த பணிப்புரையை விடுத்திருக்கிறார்.

இதன்போது வாகனங்களை திருத்தி முடிப்பதில் நிலவும் தாமதத்திற்கான காரணங்களை கேட்டறிந்து கொண்ட ஆணையாளர் அவற்றை துரிதமாக திருத்தி சேவையில் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் இவற்றுக்கு தேவையான உதிரிப்பாகங்களை துரிதமாக கொள்வனவு செய்து வழங்குமாறும் திருத்துனர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களை கேட்டுக் கொண்டார்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் டிலிப் நௌஷாட் உள்ளிட்டோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

## யாஹ்யா சின்வார்...

இருந்து வெளியேற்றியது மிகப்பெரிய தவறு என்று கருதுகிறார்கள்.

2015-ஆம் ஆண்டில், அமெரிக்க வெளியுறவுத்துறை, சின்வாரை 'உலகளாவிய பயங்கரவாதி' என்று அதிகாரப்பூர்வமாக வகைப்படுத்தியது.

2021-ஆம் ஆண்டு மே மாதம் இஸ்ரேலிய விமானத் தாக்குதல்கள் காஸா பகுதியில் உள்ள அவரது வீடு மற்றும் அலுவலகத்தைக் குறிவைத்தன.

2022-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ஒரு தொலைக்காட்சி உரையில், கிடைக்கக் கூடிய எந்தவொரு வழியிலும் இஸ்ரேலைத் தாக்குமாறு பாலத்தீன மக்களை அவர் ஊக்குவித்தார்.

ஹமாஸின் அரசியல் பணியகத்தை அதன் ஆயுதப் பிரிவான இஸ்ஸடீன் அல்-கஸ்ஸாம் படையுடன் இணைக்கும் முக்கிய நபராக சின்வாரை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இஸ்ஸடீன் அல்-கஸ்ஸாம் அமைப்புதான், தெற்கு இஸ்ரேலில் அக்டோபர் 7-ஆம் தேதி நடந்த தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கியது.

சின்வார், தனது சிக்னல் கண்காணிக்கப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்விடுவோமோ என்ற அச்சத்தில் யாருடனும் தொடர்பு கொள்ளாமல், காஸாவிற்கு கீழே எங்கோ சுரங்கப்பாதையில் தனது மெய்க்காப்பாளர்களுடன் ஒளிந்துகொண்டிருப்பதாக இஸ்ரேல் நம்பி வந்தது.

இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்ட பிறகு 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், சின்வார் ஹமாஸ் ஆயுதக்குழுவின் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.






மாலைக்கதிர்
Maalaikkathir



# இலங்கையில் பெண் அரசியல்

**சி.கதீசனா**
ஊடகக் கற்கைகள்
யாழ் .பல்கலைக்கழகம்

பெண் அரசியல்என்பதுஒருஜனநாயகநாட்டின் நல்லாட்சிகான அடித்தளம். ஏனெனில்நல்லாட்சி என்பது பெண்களின் சமமான பங்கேற்றலுடன் தீர்மானங்கள் எடுக்கப்படுவதாகும். அதன் ஏனைய குணாம்சங்களான ஒழிவு மறைவற்ற தன்மை பொறுப்பேற்றல் போன்றவற்றை பூரணப்படுத்துவதற்கு பெண்களின் அரசியல் பங்களிப்பு அவசியமாகும்.

அந்த வகையில் இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபாகம் பற்றி பார்க்கும் போது, இலங்கை அரசியலில் பெண்களுடைய ஆர்வம் மற்றும் பங்கு பெற்றவர்கள் தொடர்பில் நோக்க வேண்டியது இன்றியமையாதது. உலக தரவரிசையில்பெண்களது அரசியல்பங்குபெற்றில் கணிப்பீட்டின்படி 177–வது இடத்தில் இலங்கை உள்ளது.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அழுத்தங்களை வழங்க வேண்டுமாக இருந்தால் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்கள் அவசியமானவை. அதே போல் தான் பெண்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியமாகும்.

இலங்கையை பொறுத்த வரை பெண்களின் சனத்தொகையானது 52. 01 வீதமாக காணப்படுகிறது. 2015 இல் தெரிவான பெண் நாடாளுமன்றபிரதிநிதிகளின்எண்ணிக்கையானது 2010ல் தெரிவான 13 எண்ணிக்கையினையே பிரதிபலிக்கின்றதே தவிர இவற்றில் அதிகரிப்பு ஏற்படவில்லை.

225 பாராளுமன்ற உறுப்பினர்களில் கடந்த ஆட்சியில் 13 பெண் உறுப்பினர்களே உள்ளமை இலங்கையில் பெண் அரசியல் பங்குபற்றலின் ஆர்வமின்மையை எடுத்துக்காட்டுகிறது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது மொத்த பிரதிநிதிகளின் விகிதாசார அடிப்படையில் பெண் பிரதி நிதிகளின் விகிதாசாரமானது.

நாடாளுமன்றத்தில் 6 சதவீதத்திலும் குறைவாகவே காணப்படுகிறது. 2020 இல் சுமார் 5.38 வீதம் பெண்கள் மாத்திரமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். அந்த வகையில் 2024 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக எந்த ஒரு பெண் வேட்பாளரும் போட்டியிடவில்லை.

இலங்கையில் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தேர்தலானது செப்ரெம்பர் 21 இல் நடைபெற்றது. இதில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இலங்கை வரலாற்றில் முதல் தடவை அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிட்ட சந்தர்ப்பம் இதுவாகும். இந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இரண்டு தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் இரண்டு தேரர்கள் உட்பட 38 பேர் போட்டியிட்டனர். எனினும் பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லை.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜனாதிபதி தேர்தலில் எந்த ஒரு பெண் வேட்பாளரும் போட்டியிடவில்லை. நாட்டின் சனத் தொகையில் 52 வீதமான பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அதில் 5.8 வீதமானவர்களே நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கின்றனர்.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இரண்டு தேரர்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டனர். பா.அரியநேத்திரன், முகம்மது இல்லயாஸ், அபுபக்கர் இன்பாஸ், மயில்வாகனம், திலகராஜ் ஆகிய நான்கு வேட்பாளர்களும் சிறுபான்மையினர்.

ஐந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேரும் போட்டியிட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த சஜித் பிரேமதாச, அநுர குமார திசாநாயக்க, ரொஷான் ரணசிங்க, விஜயதாச ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ச ஆகியோர் போட்டியிட்டனர். இதேவேளை இதில் பெண்கள் யாரும் போட்டியிடவில்லை.

நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க சுட்டிக்காட்டி உள்ளார். பெண் பிரதிநிதித்துவம் இல்லாத ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் துடுப்பு இல்லாத படகு போன்றது என்றும் கீதா குமாரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் 25 வீதம் பெண்களின் உரிமையினை உறுதிப்படுத்த வேண்டும் என பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்தோடு, தமிழ் தேசிய கட்சிகளை ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சிவில் சமூக செயற்பாட்டாளர் மிரேகா நாகேஷ்வரன், மட்டக்களப்பு சிவில் வலையமைப்பின் உறுப்பினர்களான குணரெட்னம் யுனிதா மற்றும் பிரசாந்தன் பவித்திரா ஆகியோர் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது குறிப்பிட்டுள்ளனர்.

கட்சிகள் பேச்சளவிலேயே பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்து பேசுகின்றனர். உளரீதியாக அவர்கள் பெண்களுக்கான பிரதிநித்துவத்தினை வழங்குவதை உறுதிப்படுத்துவதில்லை. எனவே, வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது வேட்பாளர் பட்டியில் பெண்களின் அங்கத்துவத்தினை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம்” என தெரிவித்துள்ளனர்.



# இரண்டாம் மொழி பயிற்றுவிக்கும் திட்டம் ஆரம்பம்







(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவுபிரதேசசெயலகநலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் அரசகரும மொழிகள் திணைக் களத்தின் அனுமதியைப் பெற்று இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியானது அரச அலுவலர்களுக்காக இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன்பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

காரைதீவுபிரதேசசெயலாளர் கணேசமூர்த்தி அருணன், உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன்மற்றும்நலன்புரிச்சங்கசெயலாளர்செ. கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18 இல் வெளியிடப்பெற்றது.